செய்தி வெளியீடு எண்: 131 /2018 நாள்: 07.03.2018

**திருவள்ளுவர் பல்கலைக்கழக 13 வது பட்டமளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின் தலைமையில் நடைப்பெற உள்ளது.**

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் சேர்க்காடு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 13 வது பட்டமளிப்பு விழா 09.03.2018 வெள்ளிக்கிழமை காலை 11.0 மணியளவில் திருவள்ளுவர் பல்கலைகழக அரங்க வளாகத்தில் நடைப்பெறவுள்ளது என்று திருவள்ளுவர் பல்கலைகழக துணை வேந்தர் திரு.கே.முருகன் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் திருவள்ளுவர் பல்கலைகழக துணை வேந்தர் திரு.கே.முருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 13வது பட்டமளிப்பு விழா வருகின்ற வெள்ளிக்கிழமை, மார்ச் 9, 2018 அன்று பல்கலைக்கழக கலை அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இப்பட்டமளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற இருக்கிறது. இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்கள். மேலும் மாண்புமிகு நீதியரசர் திரு. வா. பார்த்தீபன், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 49,789 மாணவ மாணவிகள் பட்டம் பெறவிருக்கிறார்கள். அவற்றில் 234 பேர் நேரிடையாகவும், 49,555 பேர் அஞ்சல் வழியாகவும் பட்டம் பெறவுள்ளனர். மேலும் 387 பேர் பட்டயப்படிப்பும், 38,933 இளங்கலை பட்டமும், 8046 பேர் முதுகலை பட்டமும், 2,238 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் மற்றும் 185 பேர் முனைவர் பட்டமும் பெற உள்ளனர். இவற்றில் 33 பேர் இளங்கலை பாடப்பிரிவுகளிலும் மற்றும் 16 பேர் முதுகலை பாடப்பிரிவுகளிலும் தரவரிசை பட்டியலில் பட்டமும் பரிசுகளும் பெறவிருக்கிறார்கள். என்று திருவள்ளுவர் பல்கலைகழக துணை வேந்தர் திரு.கே.முருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது திருவள்ளுவர் பல்கலைக்கழக பதிவாளர் திரு.வெ.பெருவழுதி, பல்கலைக்கழக தேர்வுகள் கட்டுப்பாட்டு அலுவலர் திரு.செந்தில் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர்-9.

7/3/18.